# 4

# கிறிஸ்துவின் சரீரம்

*"நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களா யுமிருக்கிறீர்கள் " (1 கொரி. 12:27).*

ஒருவேளை, ஒரு மனிதர் ஒரு சிறு ஆகாய விமானத்தைக் காராகப் பயன்படுத்த முயற்சி செய்தார் என்று வைத்துக் கொள்ளுவோம். அவர் அந்த ஆகாய விமானத்தை ஓட்டுவது கடினம் என்றும், மூலைகளில் திருப்புவது மிகவும் அழகற்றது என்றும், பயணிகளின் வசதிக்கு அசாதாரணமானது என்றும், நிலத்தின் மீது பயணம் செய்ய ஏற்பில்லாத வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் நெடுஞ்சாலைப் போக்குவரத்திற்கு முற்றிலும் பொருத்தமற்றது என்றும் கண்டறிவார். ஆகாய விமானத்தின் "உள்ளான பண்பின்" காரணத்தினால், ஆகாய விமானமானது ஒரு கார் என்ற வகையில் பயன்படுத்தப்படலாம் என்று குறிப்பிடுவது உண்மைக்கு மாறானதாக உள்ளது. இது இந்த உபயோகத் திற்காகக் கட்டப்படவில்லை, மற்றும் இப்படிப்பட்ட ஒரு உபயோக மானது இதன் இயல்பை மீறும் செயலாக இருக்கும்.

சபையின் இயல்பைப் பற்றி தவறாகப் புரிந்து கொள்ளும் காரணத் தினால், புதிய ஏற்பாட்டு சபையைப் பற்றி தவறான சித்தரிப்பானது அடிக்கடி கைக்கொள்ளப்படுகின்றது. ஆகையால், சபையின் பணி, நோக்கம் மற்றும் உலகத்தில் அதன் அடையாளம் போன்ற சரியாக உணருவதற்கு, சபையின் "உள்ளான பண்பை" புரிந்து கொள்வது அவசியமாய் உள்ளது.

நாம் கண்டுள்ளபடி, புதிய ஏற்பாட்டில் (விசேஷமாகப் பவுலின் எழுத்துக்களில்), "கிறிஸ்துவின் சரீரம்" என்பது சபைக்கான திறவுகோல் விளக்கங்களில் ஒன்றாக உள்ளது.[1] இந்த சொற்றொடரானது சபையில் செயல்முறை விளக்கமாகவும் (1 கொரி. 12:23-26) மற்றும் சபையின் பணிநிலை விவரிப்பாகவும் (1 கொரி. 12:27) பயன்படுத்தப்படுகின்றது. சபையின் விவரிப்பு என்ற வகையில் இந்த சொற்றொடரை புரிந்து உணராத வரையில் புதிய ஏற்பாட்டு சபையின் இயல்பு புரிந்து கொள்ளப்பட முடியாது.

சபைக்கு புதிய ஏற்பாட்டில் உள்ள இந்த இயற்பெயருக்கு நாம் சிறப்பான கவனத்தைக் கொடுப்போம். இந்த விளக்கம் எதைத் தெரிவிக்கின்றது?

## கிறிஸ்துவுடன் ஒருங்கிணைதல்

முதலாவது, இச்சொற்றொடரானது கிறிஸ்துவுடன் ஒருங்கிணைதலைச் சுட்டிக்காட்டுகின்றது. மனமாற்றம் என்பது "ஒருவர் கிறிஸ்துவுக்குள் தமது பற்றுறுதியை வாக்குறுதியளிப்பதைக் காட்டிலும்" மேலானதாக உள்ளது. இது ஒருவர் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தில் பிரவேசிக்கையில் கிறிஸ்து வுடன் தனிச் சிறந்த வகையில் ஒருங்கிணைதல் என்பதாக உள்ளது.

கிறிஸ்துவுக்கு மனம் மாறும் செயல்முறையின் ஒரு பகுதி என்ற வகையில் நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின்றோம். பவுல், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா?" (ரோமர் 6:3) என்று எழுதினார். கிறிஸ்துவுடன் ஒன்றுபடுதல் என்ற கருத்தானது ரோமர் 6:4ல் சிறப்பாக உய்த்துணரப்படுகின்றது: "மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்." மேலும் பவுல், "நாம் … எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, …" (1 கொரி. 12:13) என்றும் கூறினார். எனவே ஞானஸ் நானத்தில் நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் நடப்படும்படியாக அவருடன் ஒன்றாகுதலுக்குக் கொண்டு வரப்படுகின்றோம்.

கிறிஸ்துவுடன் ஒன்றாகும் இந்த ஆவிக்குரிய ஒருமைப்பாடானது திருமணத்துடன் ஒப்பிடப்படலாம். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருமணத்தில் பிரவேசிக்கும் பொழுது, "இரண்டு பேர் வாழ்நாள் முழுவதற்கும் ஒருவருக்கொருவர் ஒரு ஒப்புக் கொடுத்தலை ஏற்படுத்துதல்" என்பதற்கும் மேலானதொன்று நடைபெறுகின்றது. திருமணத்தில் ஒரு ஒருமைப்பாடு நடக்கின்றது. வாழ் நாள் முழுவதிலும் கணவனும் மனைவியும் "ஒரே மாம்சம்" என்று குறிப்பிடப்பட முடியுமளவுக்கு மிக ஆழ்ந்தறிவுள்ள ஒருமைப்பாடாக இது உள்ளது (எபே. 5:31). திருமணத் தம்பதியர் "ஒருவருக்கொருவர் தங்கள் வாக்குறுதிகளைக் கூறினர்" என்று நாம் அடிக்கடி கூறுகின்றோம். ஒருவேளை, "அவர்கள் திருமணத்தின் ஒருமைப்பாட்டிற்குள் பிரவேசித்தனர்" என்று கூறுவது இன்னும் சிறப்பாய் இருக்கும். "ஒருமைப்பாடு" என்ற வார்த்தையானது தொடர்ந்து ஒன்றா யிருத்தல் என்பதைத் தெரிவிக்கின்றது. திருமணம் என்பது இருவர் ஒன்றாய் நடத்தல் அல்லது ஒரே வீட்டில் குடியிருத்தல் என்பதை மட்டும் கொண்டிருப்பதில்லை; திருமணம் என்பது வாழ்நாள் முழுவதும் இருவர் ஒன்றாயிருப்பதை வேசித்தனம் அல்லது மரணம் மாத்திரமே அழிக்கக் கூடியதாயிருக்கின்றது. இருவர் திருமணத்தில் பிரவேசிக்கையில் அவர்கள் தங்கள் சொந்த உடலின் மீதுள்ள அதிகாரத்தைக்கூட ஒப்புவிக்கின்றனர் என்ற அளவுக்கு இது உண்மையாக உள்ளது. பவுல், "மனைவியானவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி"

(1 கொரி. 7:4) என்று எழுதினார்.

அது போலவே, மாற்றம் அடைதலில் நாம் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபைக்குள் சேர்க்கப்படுகையில் நாம் அவருடன் ஒரு ஒருமைப் பாட்டிற்குள் பிரவேசிக்கின்றோம். நாம் கிறிஸ்துவுடன் ஒன்றாகின்றோம் - கிறிஸ்து நம்முடையவராயிருக்கின்றார் மற்றும் நாம் கிறிஸ்துவினு டையவர்களாய் இருக்கின்றோம். இனியும் தமது சொந்த வாழ்வின்மீது நாம் அதிகாரம் கொண்டவர்களாய் இருப்பதில்லை; நாம் கிறிஸ்துவுக்குரியவர் களாய் இருக்கின்றோம் - நாம் அவருடன் நிலையான ஒருமைப்பாட்டில் வாழ்கின்றோம் (1 கொரி. 6:16).

## கிறிஸ்துவின் மூலம் ஒருமைப்பாடு

இரண்டாவது, ''கிறிஸ்துவின் சரீரம்'' என்பதான சபையின் விவரிப்பானது கிறிஸ்துவின் மூலம் ஒருமைப்பாடு என்பதைக் கருத்தாய்த் தெரிவிக்கின்றது. இது சபையை பல உறுப்புகள் ஒன்றிணைந்து செயல்படும் ஒரு உடல் என்ற வகையிலான ஒரு உயிர்ப்பொருளாகச் சித்தரிக்கின்றது.

பவுல், "எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கின்றது; அந்தப் பிரகாரமாகவே கிறிஸ்துவும் இருக்கிறார்" (1 கொரி. 12:12) என்று எழுதினார். வித்தியாசப்பட்ட பல அவயவங்கள் கிறிஸ்துவின் ஒரே சரீரமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இயல்பான உடலைப் பற்றிப் பவுல் கூறியது சபைக்கும் கூறப்பட முடியும்: "சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது," "அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே?'' (1 கொரி. 12:14, 19). இவ்விதமாக, கிறிஸ்தவர்கள் "கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களையும்'' (1 கொரி. 12:27) இருக்கின்றனர் என்று முடிவு செய்யப்பட வேண்டும்.

*கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள அவயவங்களால்*
*அனுபவிக்கப்படும் ஒருமைப்பாடானது*
*இயல்பான உடலில் உள்ள அவயங்களால்*
*அனுபவிக்கப்படும் ஒருமைப்பாட்டைப்*
*போன்றதாகவே இருக்க வேண்டும்.*

"கிறிஸ்துவின் சரீரம்" என்ற சொல் விளக்கமானது நாம் கிறிஸ்துவுக் குரியவர்கள் என்ற கருத்தைத் தெரிவிப்பதுடன், இயல்பான சரீரத்தின் அவயவங்கள் ஒன்றையொன்று சார்ந்திருப்பது போலவே நாமும் ஒருவருக்கொருவர் சார்ந்திருக்கின்றோம் என்ற கருத்தையும் தெரிவிக் கின்றது. சரீரத்தின் ஒரு அவயவம் துன்புறும்போது மற்ற உறுப்புகள் யாவும் பரிதவித்துத் துன்புறுகின்றன. "சரீரம்" என்ற கருத்திலிருந்து மிகத் தெளிவாக ஊகித்துணரக்கூடிய பாடம் பின்வருமாறு: "சரீரத்தினுள் பிரிவினை எதுவும்

இருக்கக் கூடாது, ஆனால் அதன் அவயவங்கள் ஒன்று மற்றவற்றின் மேல் அக்கறையுடையதாக இருக்க வேண்டும். ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப்பாடுபடும்; ஒரு அவயவம் மகிமைப்பட்டால், எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும்" (1 கொரி. 12:25, 26).

"கிறிஸ்துவின் சரீரம்" என்ற சொல் விளக்கம் புரிந்து கொள்ளப்படும் பொழுது, நாமகரணத்துவத்திற்கான பகுத்தறிவு யாவும் அழிக்கப் படுகின்றது. நாமகரணத்துவமானது வித்தியாசப்பட்ட பல சரீரங்கள் ஒவ்வொன்றும் மாறுபட்ட அடையாளங்களும் நம்பிக்கைகளும் உடைய தென்று வாதிடுகின்றது. புதிய ஏற்பாட்டின் "கிறிஸ்துவின் சரீரம்" என்ற கருத்தானது ஒரே சரீரம் என்பதைக் கிறிஸ்துவின் சரீரமாகச் சித்தரித்து, ஒவ்வொரு கிறிஸ்தவரும் அதன் அவயவமாயிருந்து, அதன் மற்ற எல்லா அவயவங்களையும் அன்புகூர்ந்து, அந்த சரீரத்தின் மற்ற ஒவ்வொரு அவயவங்களையும் கண்ணோக்குவதாக விளக்கப்படுத்துகின்றது. புதிய ஏற்பாட்டின் சபையானது கிறிஸ்துவின் சரீரமாய் இருக்குமென்றால், நாமகரணத்துவம் என்பது "சபைக்கான" தேவனுடைய வடிவமைப்பாய் இருக்க முடியாது; நாமகரணத்துவம் சரியானதாய் இருக்குமென்றால், புதிய ஏற்பாட்டின் சபையானது கிறிஸ்துவின் ஒரே சரீரமாய் இருக்க முடியாது.

இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைது செய்யப்பட்ட இரவில், பிற்பாடு அவரை விசுவாசிக்கப் போகின்றவர்களுக்காக ஜெபித்தார் (யோவா. 17:21-24). அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்த பின் வந்த பெந்தெகொஸ்தேயன்று அவர் சபையை ஸ்தாபித்தார், அது அவருடைய பூமிக்குரிய சரீரமாய் இருக்கும்படியும், தாம் ஜெபித்த ஒருமைப்பாட்டை அது பராமரிக்கும்படியாகவும் அவர் சபையை ஸ்தாபித்தார். நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் பிரவேசிக்கையில், அந்த சரீரத்தின் எல்லா அவயவங்களுடனும் ஒருமைப்பாட்டிற்குள் நாம் பிரவேசிக்கின்றோம். பிரிவினைச் சுவர்கள் யாவும் இடித்து வீழ்த்தப்படுகின்றன: "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:28).

கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள அவயவங்களால் அனுபவிக்கப்படும் ஒருமைப்பாடானது இயல்பான சரீரத்தின் அவயவங்களினுடைய ஒருமைப்பாட்டைப் போன்றதாக ஒன்று கூடிப் பணி செய்தல், ஒருவரில் ஒருவர் அன்புகூருதல், மற்றும் ஒருவர் மீது ஒருவர் பரிவிரக்கம் கொள்ளுதல் போன்றவைகளை உடையதாக இருக்க வேண்டும். இயல்பான சரீரத்தின் அவயவம் ஏதொன்றும் மற்ற எந்த அவயவத்தினுடனும் போட்டியிடுவ தில்லை. ஒவ்வொரு அவயவமும் மற்ற எல்லா அவயவங்களுடன் சேர்ந்து பணி புரிந்து ஒருமைப்பட்ட சரீரமாய் இருக்கும்படி ஒருங்கிணைக்கப்பட்ட இருக்கும் பொருளை உண்டாக்குகின்றது.

இயேசு தமது மக்கள் இந்தப் பூமியில் தம்முடைய ஆவிக்குரிய சரீரமாய் இருக்க வேண்டும் என்ற ஒரே ஒரு வேண்டுகோளை மட்டுமே விடுத்தார். அவர்கள் நாமகரணக் கூட்டங்களாய் எல்லா வகைகளும் பெயர்களும் உடையவர்களாய் இருக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளவில்லை.

அவரிடத்தில் கொள்ளும் பற்றுறுதியானது நாம் அவரது ஒரே ஆவிக்குரிய சரீரமாய் இருப்பதற்கு அவரது வேண்டுகோளை நிறைவேற்றி அவரை மகிமைப் படுத்தும்படி மட்டுமே நம்மிடத்தில் வேண்டிக் கேட்கின்றது.

## கிறிஸ்துவுக்குப் பிரயோஜனமாயிருத்தல்

மூன்றாவது, சபையின் "சரீரம்" என்ற விவரிப்பானது கிறிஸ்துவுக்காகப் பயன்பாட்டுத் தன்மை அல்லது பிரயோஜனமுடைமை என்பதைப் பண்பாய்ச் சுட்டிக்காட்டுகின்றது. இது உலகத்தில் கிறிஸ்துவின் ஊழியம் செய்யப்பட வேண்டிய வழிமுறையை மறைமுகமாய் உணர்த்துகின்றது.

பவுல் தமது வாழ்வு மற்றும் ஊழியம் பற்றி, "கிறிஸ்து எனக்கு ஜீவன் ..." (பிலி. 1:21) என்று கூற முடிந்தது. அவர் ஒரு நாமகரணக் கூட்டத்தையோ அல்லது மனிதரால் ஏற்படுத்தப்பட்ட வேறு எந்தக் குழுவையோ, நிறுவனத்தையோ பிரதிநிதித்துவப்படுத்தவில்லை; அவர் மனிதர்களுக்கு முன்பாக, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தின் ஒரு அவயவமாகவே நின்றார். அவர் தம்மை, மனிதர்களிடையே ஒப்புரவை ஏற்படுத்தும் தேவனுடைய கருவியாகக் கண்டார்: "ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்" (2 கொரி. 5:20). பவுல் தாம் கிறிஸ்துவின் சரீரமாயிருப்பதற்காகப் பாடுபடுதலைக் கூடக் கண்டார்: "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோ. 1:24).

கிறிஸ்துவின் ஊழியமானது பூமியில் எவ்விதம் செய்யப்பட வேண்டியதாக உள்ளது? கிறிஸ்து பரலோகத்தில் பிதாவின் வலது புறத்தில் இருக்கின்ற இவ்வேளையில் அவரது பூமிக்குரிய ஊழியம் எவ்விதம் தொடரப்பட வேண்டியதாக உள்ளது? இந்தக் கேள்விக்கு, "கிறிஸ்துவின் சரீரத்தின் மூலமாக" என்பதே தெளிவான பதில் ஆகும். சபையை நிலைநாட்டுதலுடன் இயேசு தம்முடைய ஆவிக்குரிய சரீரத்தை உலகிற்கு ஊழியம் செய்து அதன் மீது அன்புகூரும் தமது வழிமுறையாக உலகத்திற்கு அனுப்பி வைத்தார்.

புதிய ஏற்பாடானது தலையில்லாத உடலைப் பற்றியோ அல்லது உடலில்லாத தலையைப் பற்றியோ பேசுவதில்லை. பூமியில் கிறிஸ்தவர்கள் யாரும் இல்லையென்றால், கிறிஸ்து தம்முடைய ஊழியத்தைச் செய்யும்படி வழி நடத்தவோ, இயக்கவோ, ஒரு சரீரத்தைக் கொண்டிருக்க மாட்டார். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் முற்றான அதிகாரமாக மற்றும் வழிகாட்டியாக நோக்காதிருந்தால், சபையானது தலையற்ற ஒரு உடலாய் இருக்கும். இயேசு தம்முடைய சபையின் தலையாய் இருக்கின்றார், மற்றும் அவருடைய சபையானது இந்த பூமியில் அவருடைய சித்தத்திற்குத் தங்களை ஒப்புக் கொடுத்து, இங்கு அவருடைய ஊழிய சக்தியாய் செயல்படும் மக்களால் ஆக்கப்பட்டதாக உள்ளது.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாய் உள்ளனர். நாம் உலகத்தின் தேவைகளைக் காணும் படிக்கு அவருடைய கண்களாய் இருக்கின்றோம். நாம் மனிதத் தேவை களைக் கண்டு அதற்கு ஊழியம் செய்யாதிருந்தால், அவருடைய ஆவிக்குரிய கண்கள் பார்வையற்ற கண்களாயிருக்கும். நாம் அவரது வசனத்தைக் கேட்டு அவருடைய இயக்குதல்களைக் கவனிக்கும் காதுகளாய் இருக்கின்றோம். கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமானது அவருடைய சித்தத்தைக் கேட்க முடியாததாயிருந்தால் எவ்வளவு பரிதாபகரமாயிருக்கும்! நாம் அவருடைய வசனத்தைப் பேசுவதற்கும் உலகத்தில் அவரைத் துதிப்பதற்குமான அவருடைய நாவாய் இருக்கின்றோம். அவருடைய சரீரமானது இப்பொழுது போலப் பேச்சற்றிருந்தால் கிறிஸ்துவின் இருதயத்தை உடையச் செய்வதாயிருக்கும். நாம் சுமைகளையும் பொறுப்புகளையும் சுமப்பதற்கான அவருடைய தோள்களாயிருக்கின்றோம். கிறிஸ்து தம்முடைய சபையானது அவர் நமக்குக் கொடுக்கும் எவ்வித வேலை களையும் சுமக்கக் கூடிய அளவு ஆரோக்கியமும், பலமும் உடையதாக இருக்க வேண்டுமென்று கிறிஸ்து விரும்புகின்றார். நாம் இவ்வுலகில் அவரது செய்தியை எடுத்தோடும் அவருடைய கால்களாய்/பாதங்களாய் இருக்கின்றோம். நாம் அவரது பாதங்களைப் பலமானதாகவும் அவருக்காக விரைவாய் ஓடும்படியானவைகளாகவும் காத்துக் கொள்ள வேண்டும். நாம் ஊழியத்தில் அவருடைய மென்மையான கரங்களாய் இருக்க வேண்டும். அவரது கரங்கள் முழுமையானவைகளாக, திறன்மிக்கவைகளாக, ஊழியத்திற்கு ஒப்புவிக்கப்பட்டவைகளாக இருக்கும்படி நாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தினுடைய பயன்பாடு, மேதைத் தன்மை மற்றும் நடைமுறைச் செயல்பாட்டுத் தன்மை ஆகியவை பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். எப்பொழுதாகிலும், எங்காகிலும் யாரோ ஒருவர் கிறிஸ்தவராகின்ற பொழுது, அவர் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்யவும், அவருடைய அன்பை வெளிப்படுத்தவும் கிறிஸ்துவின் சரீரத்தில் செயல் படும் அவயவமாகின்றார். இந்த வழிமுறையினால், அவர் கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடருகின்றார். அவர் கிறிஸ்துவுடன் ஒன்றாகின்றார், மற்றும் அவருடைய சரீரத்தின் மற்ற எல்லா அவயவங்களுடனும் ஒன்றா கின்றார். இவ்விதமாக, கிறிஸ்துவின் சரீரத்தினுடைய ஒருமைப்பாடானது உலகிற்குத் தெளிவாக்கப்படுகின்றது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் தம்மை வேதாகமம் சபையைக் குறிப்பிடுகின்ற வழிமுறையிலேயே குறிப்பிட்டுக் கொள்ளுகின்றார். அவர் தமக்கு வழிகாட்ட பூமிக்குரிய எந்த தலைமையகங் களையும் நோக்குவதில்லை; அவர் சரீரத்தின் தலையாகக் கிறிஸ்துவை மட்டுமே நோக்குகின்றார். இதன் விளைவாக, எல்லா கனமும் மகிமையும் கிறிஸ்துவுக்கே அளிக்கப்படுகின்றன. “கிறிஸ்துவின் சரீரம்” என்பது எவ்வளவு எளிமையாக, ஆயினும் எவ்வளவு ஞானமும் செயல் வலிவும் உடையதாக இருக்கிறதென்று பாருங்கள்!

எல்லைக்குட்பட்ட நமது மனித ஞானத்திற்குக்கூட “கிறிஸ்துவின் சரீரம்” என்ற கருத்தானது ஒரு அறிவுணர்வை ஏற்படுத்துகின்றது. இது

செயல்திறன், பணிபுரியும் தன்மை மற்றும் நடைமுறை ஆகியவற்றை கொண்டதாக உள்ளது. இது தேவனுடைய ஞானத்தையும் மகிமையையும் பிரதிபலிக்கின்றது.

நாம் கிறிஸ்துவின் சரீரமாய் இருந்து கிறிஸ்துவின் மகிமைக்காகக் கிறிஸ்துவின் ஊழியத்தைச் செய்வோம்.

## முடிவுரை

சபை என்பது பூமியில் கிறிஸ்துவின் சரீரமாய் உள்ளது. இந்த சத்தியத்தின் காரணமாக, ரோமாபுரியில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிப் பவுல், "ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல, அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்" (ரோமர் 12:4, 5) என்று கூறினார். கிறிஸ்தவராவதில் நாம் கிறிஸ்துவுடன் ஒருமைப்பாட்டில் பிரவேசிக்கின்றோம், கிறிஸ்துவின் மூலமாக ஒருவருக்கொருவர் ஒருமைப்பாட்டிலும், கிறிஸ்துவுக்குப் பயன்பாடு, பிரயோஜனதன்மை ஆகியவற்றிலும் பிரவேசிக்கின்றோம்.

பல்பொருள் விற்பனை அங்காடியின் பலகணியில் உள்ள அலங்கார பொம்மைக்கும் மனிதருக்கும் எவ்வளவு மாறுபாடு உள்ளது! அலங்கார பொம்மைக்கு வடிவம் உண்டு, ஆனால் உயிர் இல்லை. அது ஒரு புறம்பான வடிவத்தை, உடலைப் பெற்றுள்ளது, ஆனால் அதற்கு ஆவி இல்லை. அது வெறும் பிரதிமையாக, செயற்கைப் பிரதிநிதித்துவமாக, உண்மையற்றதாக மட்டுமே உள்ளது. ஒரு மனிதரோ வடிவம், ஆவி மற்றும் உயிர் ஆகியவைகளை உடையவராய் இருக்கின்றார்; அவர் சரீரம் மற்றும் ஆவியில் உண்மைத் தன்மை உடையவராய் இருக்கின்றார். அவர் ஒரு சரீரம், ஒரு ஆத்துமா மற்றும் ஒரு சிந்தை ஆகியவை உடையவராய் இருக்கின்றார். அவரால் சிந்திக்க, உணர, அன்பு செய்ய மற்றும் கீழ்ப்படிய முடியும்.

அலங்கார பொம்மைக்கும் மனிதருக்கும் இடையில் உள்ள வேறுபாடானது மனிதரால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனத்திற்கும் கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இடையில் உள்ள வேறுபாட்டை விளக்கப்படுத்துகின்றது. மனித நிறுவனமானது ஒரு வடிவத்தைக் கொண்டுள்ளது, ஆனால் அதில் தேவன் வாசம் பண்ணுவதில்லை; அதற்குள் மனிதர் மட்டுமே வாசம் பண்ணுகின்றனர். மனித நிறுவனம் செய்து முடிக்கத் தேடும் யாவும் மனித சக்தி மற்றும் மனித ஞானம் ஆகியவற்றின் மூலமாகவே செய்யப்பட்டாக வேண்டும். கிறிஸ்துவின் சரீரமானது ஆவியானவரால் உள்ளாக வாழப்படுவதாக, தேவனுடைய ஜீவனால் உயிர் வாழ்வதாக மற்றும் கிறிஸ்துவாலேயே வழி நடத்தப்பட்டு இயக்கப்படுவதாக உள்ளது.

புதிய ஏற்பாட்டின் சபையானது கிறிஸ்துவின் சரீரமாய் இருக்கின்றது. அதிகாரப்பூர்வமான கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் அதன் உறுப்பினராய் இருக்கின்றார். இது ஒரு நிறுவனமல்ல, ஆனால் கிறிஸ்துவின் ஆவியினால் வாழும் ஒரு உயிர்ப் பொருள் ஆகும். இது தனது தலையான கிறிஸ்துவால் வழி நடத்தப்படுகின்றது. கிறிஸ்துவின் மகிமைக்காக வாழ்வதும் அவருக்கு

ஊழியம் செய்வதுமே உலகத்தில் இதன் நோக்கமாக உள்ளது.

நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவமாய் இருக்கின்றீர்களா?

குறிப்பு

[1]புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்துவின் சரீரம்" என்ற சொற்றொடர் தோன்றும் இடங்கள் யாவற்றையும் பிற்சேர்க்கை 3 உள்ளடக்குகின்றது. இந்த அட்டவணையானது, இச்சொற்றொடர் பயன்பாட்டைக் கற்கவும், சபையின் இயல்பினுடைய முக்கியமான இந்த அம்சத்தைக் கவனிக்கவும் உங்களுக்கு உதவும்.

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. "கிறிஸ்துவின் சரீரம்" என்ற சொற்றொடரானது சபையுடனான தொடர்பில் பயன்படுத்தப்படும் இரு வழிமுறைகளைப் பற்றிக் கலந்துரையாடவும்.
2. கிறிஸ்துவுக்குள் நமது ஞானஸ்நானத்தை கிறிஸ்துவுடன் ஒருமைப் படுத்தப்படும் வகையில் விவரிக்கவும்.
3. கிறிஸ்துவுக்குள் வருதல் பற்றி ரோமர் 6:3 என்ன கூறுகின்றது?
4. கிறிஸ்துவுடன் நாம் ஒன்றாகுதலை திருமண ஒருமைப்பாட்டுடன் ஒப்பிடவும்.
5. கிறிஸ்துவுடன் ஒன்றாகுதல் பற்றி ரோமர் 6:4 என்ன கூறுகின்றது?
6. நாம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்தலை 1 கொரி. 12:13 எவ்விதமாய்க் கூறுகின்றது?
7. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அவயவங்களாய் இருப்பது சபைகளாஅல்லது கிறிஸ்தவர்களா?
8. ஒருவர் மற்றவருடனான நமது உறவுமுறை பற்றி "கிறிஸ்துவின் சரீரம்" என்ற சொற்றொடர் தெரிவிப்பது என்ன?
9. கிறிஸ்துவின் சரீரத்தினுடைய ஒருமைப்பாடு என்ற கருத்தின் தொடர்பாக நாமகரணத்துவத்தைப் பற்றிக் கலந்துரையாடவும்.
10. கிறிஸ்துவுக்குள் நமது ஒருமைப்பாடு பற்றி கலா. 3:28 என்ன கூறுகின்றது?
11. உலகத்தில் கிறிஸ்துவின் ஊழியமானது எவ்வழிமுறையில் செய்யப்பட வேண்டும்?
12. சபை என்பது தலையற்ற உடலாகவோ அல்லது உடலற்ற தலையாகவோ உள்ளதா?
13. உலகத்தில் நாம் கிறிஸ்துவின் சரீரம் என்ற வகையில் எவ்விதமாய்ப் பணியாற்றுகின்றோம்?
14. "கிறிஸ்துவின் சரீரம்" மற்றும் சபையும் ஒன்றா?
15. நிறுவனம் மற்றும் உயிர்ப்பொருள் ஆகியவற்றை ஒப்பிட்டு, வேறுபடுத்திக் காட்டுக.